**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 400/2018**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.02.2026 | | |
| பெயர்: | அய்யம்மாள் (PW–1 Cross ) | கணவர் பெயர்: | முனியாண்டி |
| கிராமம்: | சட்டநாதபுரம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 83/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 09.02.2026</u>**
**(ஆரம்பித்த நேரம்– 11.54)**

1. நான் நாகப்பட்டினம் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவிற்கு நான் நேரடியாக புகார் மனு கொடுக்கவில்லை என்றால் நான் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்து அந்த மனு விசாரணைக்காக நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவிற்கு அனுப்பப்பட்டது. அந்த புகார் மனுவின் கையிருப்பு நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில் புகார் மனு சார்பாக நான் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. நான் ஆஜராகாத காரணத்தால்தான் புகார் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில், நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறினார்கள் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்– 12.01)**